கடிதத்தை வாசித்து. விடுப்பட்ட இடத்தைச் சரியான விடையைக் கொண்டு நிரப்புக.

குழலி த/பெ குமாரன்,
எண் 12, ஜாலான் மாவார் 43,
தாமான் மாவார்,
81700 பாசீர் கூடாங்,
ஜொகூர்.

09 நவம்பர் 2021.

அன்புத் தோழன் அமுதனுக்கு,

வணக்கம். நானும் என் குடும்பத்தினரும் இங்கு நலமாக உள்ளோம். அங்கு நீயும் உன் குடும்பத்தினரும் நலமுடன் இருக்க எல்லாம் வல்ல _____(1) வேண்டிக்கொள்கிறேன்.

அன்புத் தோழனே, எதிர்வரும் _____(2) உன் வேண்டுகோளுக்கு இணங்க நானும் என் குடும்பத்தினரும் கெடாவில் வசிக்கும் உன் இல்லம் காண வருவதை உறுதி செய்துள்ளோம். நாங்கள் அங்கு வரும் போது குறிப்பிட்ட ஒரு சில இடங்களைச் சென்று காண விரும்புகிறோம். அதைத் தெரிவிக்கவே _____(3) எழுதுகிறேன்.

பட்டணத்திலே _____(4) பழகிப் போன நாங்கள் அங்கு வந்தவுடன் கிராமம் சார்ந்த ஒரு சில இடங்களைச் சென்று காண விரும்புகிறோம். கால்நடை பண்ணை, நெல்வயல், _____(5), காய்கறித் தோட்டம் போன்றவை உன் வீட்டின் அருகில் இருப்பின் எங்களை அழைத்துச் செல்லவும். இவ்விடங்களில் பொழுதைக் கழித்து உச்சிக் குளிர ஆர்வமாய் உள்ளோம்.

மேலும், அருவி, குளம் போன்ற நீர் நிலைகளில் குளிக்கவும் ஆவலாய் உள்ளோம். கொட்டும் _____(6) குளிர்ந்த நீரில் குளிப்பது உடலுக்குக் குளிர்ச்சியையும் மனதுக்கு மகிழ்ச்சியையும் அளிக்கும் என _____(7). அதுமட்டுமா? மீன் குளத்திற்குச் சென்று மீன்களுக்குத் தீனி அளிக்கும் வாய்ப்புக்காகவும் வழி மேல் _____(8) வைத்துக் காத்திருக்கிறோம்.

தோழனே, நான் மேற்கூறிய தகவல்களை நினைவில் நிறுத்தி, முடிந்தவரை _____(9) அழைத்துச் செல்வாய் என்ற

LIVEWORKSHEETS

எதிர்ப்பார்ப்போடு விடைபெறுகிறேன். மற்றவை நேரில் சந்திக்கும்போது பேசுவோம். நன்றி.

இக்கண்,

_____(10)

குழலி

இக்கடிதத்தை | நம்புகிறோம் | பழத்தோட்டம்

விடுமுறையில் | வாழ்ந்து

அருவியில் | இறைவனை | விழி

அவ்விடங்களுக்கு | உன் தோழி

LIVEWORKSHEETS